149

உ

தாய்மொழி தழைக! தாயகம் வாழ்க !!

# தமிழணங்கு.

ஒரு மதிமுகத் தாள்.

"அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே."

மலர் க. ] விக்ரம ஐப்பசி. [ இதழ் எ.

## வாழ்த்து.

கமழ்மணங் கிளரும்வாகைக் காவலன் சேங்கோல் வெல்க!
இமிழ்முர சேழிலி பெய்க! யாவரும் யாவும் உய்க!
அமிழ்துறழ் மகளிர் கற்பா ரணிதமி ழணங்கு வாழ்க!
தமிழ்வலந் திகழ்ந்தூ ழூழி தமிழரண் தழைக! நன்றே!

## தமிழணங்கு வணக்கம்.

பன்னிப் பன்னி நின்னியல்கள்
பழகும் புலமைப் பழம்புலவோர்
பணிவா ரணிகா மணிமுற்றம்
படர்வில் தளிர்மெல் லடிநடையின்
அன்னத் தெழில்சான் றதிர்சதங்கை
அதிரா முறையின் அவிர்ந்தசிலப்
பதிகா ரத்தின் ஒளியதிர
அணியார் மணிமே கலையார்ப்பத்
துன்னித் திகழ்சிந் தாமணியிற்
றுலங்கு மணிக ளணிவிளங்கத்
தொடித்தோ ளிமிர்த்து நடங்குயிற்றுந்
தோகாய்! பாவாய்! துடியிடையாய்!
மன்னிப் பிறங்குன் தாள்அன்றி
மருவுஞ் சரண்வே றெனக்கிலையால்
மலர்சீர் மணந்த தமிழரணம்
மணங்கொண் டிணங்குந் தமிழணங்கே!

ஆ. மா. சிவஞானம்.

150

# மாணவ ரந்தாதி.

திரு. L. S. சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள்
தமிழ்ப் புலவர்
முனிசிபல் ஹைஸ்கூல் திருப்பத்தூர். வ. ஆ.

114-ம் பக்கத் தொடர்ச்சி.

கற்குமின் தேகப் பயிற்சியை நாடொறுங்காத்து நனி
அற்புற வூக்கமுற் சாகநம் பிக்கை அடைந்துரமே
நிற்குநற் பேரறி வேமிகும் வீயா நிலையினுடல்
பொற்புறு மின்பமா மாணவீர்! நீரிவை போற்றுமினே! (21)

போற்றிடு மிந்திய வூழியர் சங்கநற் பூணேநகர்
ஆற்றிடுந் தொண்டினைப் போற்பல சங்கம் அமைத்திகலோர்
கூற்றெனுங் கோபால கிட்டினக் கோகலே கோவியசீர்ப்
பேற்றினை யேபெற மாணவரே! நலம் பேணுமினே! (22)

பேணுமின் மக்களை ஈன்றருள் தாயெனப் பெண்களைநீர்
காணுமின் பண்டிதை ராமபாய் அம்மைநேர் காசினியில்
வேணுமென் றேகழ கங்களை நாட்டுமின் வேளைநிகர்
மாணுறு மாணவீர்! மானிடர்க் கின்னருள் மல்கிடவே. (23)

மல்கிசை யின்பங் குழைக்குங் கருங்கன் மனமுருக்கும்
பல்கடி நாகம் விலங்கு புள் யாவும் பரிந்தடங்கிச்
சொல்வகை செய்துள் ளுருகிடச் செய்திறஞ் சூழ்ந்ததனைப்
பல்புகழ் மாணவீர் கற்குமின் வேண்டும் பலம்பெறவே. (24)

பலன்றரு பேற்றைப் புரிந்தநா லந்தன் பணியினைப்போல்
இலந்தரு மக்கள் கலைபயில் சாலை இயற்றிநனி
நலந்தருஞ் செய்கை புரிந்திட வம்மின் நயந்துதினம்
நிலந்தரு நன்மை எனமா ணவரே! நிலையுறவே. (25)

நிலையுறு யந்திரத் தாபன விஞ்சின் நிலையமதுந்
தலையுறு ராணுவம் வேண்டும் பொருள்செய் தலமதுவுஞ்
செலவயப் பாதை புகைரத யந்திரஞ் செய்யிடமுஞ்
சிலைபயில் தானமும் மாணவீர்! செய்தினித் தேர்ந்திடுமே. (26)

தேர்ந்திடு நூல்கள் பற்பல வாயினுஞ் செம்மைநல
மார்ந்திடும் நற்பொருள் நல்கிடு நீதிக ளாய்ந்தகத்தே
யோர்ந்திடு மாணவரே! அயல்நாடுக ளோங்குவபோ
லூர்ந்திடு நம்நாட் டுயர்ந்த தொழில்பல உண்மையதே. (27)

(தொடரும்)

தமிழணங்காசிரியர் பாட்டனுர் முருகேச முதலியார் எனும்
ஆரணி ஆனைகட்டி அவல்தார் முனிசாமிமுதலியார் அவர்கள் இயற்றிய

# பொருள் விளக்க நிகண்டு.

122-ம் பக்கத் தொடர்ச்சி.

திகிரி என்பது:—

| | |
|---|---|
| தேர் | இரதத்திற்கும் |
| வெதிர் | மூங்கிலுக்கும் |
| யாழ் | வீணைக்கும் (அரு. க. 26) |
| வட்டம் | வட்ட வடிவிற்கும் |
| தேருருள் | தேர்ச்சில்லுக்கும் (தேர்ச்சக்ரத்திற்கும்) |
| ஆழி | சக்கரப் படைக்கும் |
| வெற்பு | மலைக்கும் பெயர் |

சிகி என்பது:—

| | | |
|---|---|---|
| பரிபுரம் | பாதச் சிலம்பிற்கும் | உரி. 235 |
| தீ | நெருப்பிற்கும் | |
| கேது | கேதுக்கும் | |
| மஞ்ஞை | மயிலுக்கும் பேர் | |

நெகிழி என்பது:—

| | |
|---|---|
| தீ | நெருப்பிற்கும் (பிங் 44) |
| அரி | சிலம்பிற்கும் (பிங் 1184) |
| புலிங்கம் | தீப்பொறிக்கும் (வேத) |
| நெகிழ்ந்தெனல் | அவிழ்ந்து என்பதற்கும் |
| அரணி | தீக்கடை கோலுக்கும் (பிங். 50) |
| கொள்ளி | கொள்ளிக்கட்டைக்கும் பேர் (பிங். 1719) |

எகினம் என்பது:—

| | |
|---|---|
| நாய் | சுவானத்திற்கும் |
| புளிமா | நாளினிக்கும் |
| நீர்நாய் | நீர்நாய்க்கும் |
| எகின் | ஆண்மரத்திற்கும் |
| புளி | புளியமரத்திற்கும் |
| கவரி | மானமாவுக்கும் |
| அன்னம் | அம்சத்திற்கும் பேர். |

6.

7. தக்கணம் வலம் அவாசி தற்போது தாளபேதம்
கக்கிரி வாலுங் கிப்பேர் ககரமோர் எழுத்து மேண்ணும்
குக்கியே சடர மென்ப குகனொரு படவன் சாமி
தக்கையே நெட்டி தெப்பம் தடாரிகண் டிகையினுமம்.

தக்கணம் என்பது:—

வலம் வலதுபக்கத்திற்கும் (உரி. 221)
அவாசி தென்றிசைக்கும் (பிங். 14. உரி. 221)
தற்போது தத்காலத்திற்கும்
தாளபேதம் தாள விகற்பத்திற்கும் பேர்.

தக்கிரி என்பது:—

வாலுங்கி வாலுங்கிச் செடிக்குப்பேர்.

ககரம் என்பது:—

ஓர் எழுத்து கக ராக்காரத்திற்கும்
எண் ஒன்று எனும் இலக்கத்திற்கும்.

குக்கி என்பது:—

சடரம் வயிற்றுக்குப் பேர்.

குகன் என்பது:—

ஒரு படவன் ஒரு செம்படவனுக்கும்
சாமி சிவ சுப்ரமண்யருக்கும் பேர்.

தக்கை என்பது:—

நெட்டி சடைக்கும்
தெப்பம் தெப்பத்திற்கும்
தடாரி பம்பைக்கும்
கண்டிகை பல்வகைப் பறைக்கும் பெயர். 7.

8. பொகுட்டுக்கன் னிகையே யன்றிப் பொருப்புசேற் றெழுந்த [கொப்புள்
நகைத்தலே சிரித்தல் பாடல் நிந்தித்தல் ஒளி விடுத்தல்
புகைக்கங்கிக் குறியே தூமம் புனலாவி யோசனேப்பேர்
செகுவழி கொல்வெல் லென்பர் தெகுளமே பெருகலார்தல்.

பொகுட்டே என்பது:—

கன்னிகை தாமரைக் கொட்டைக்கும் (பிங். 3009)
பொருப்பு மலைக்கும் (பிங். 3891)
சேற்றெழுந்த கொப்புள் } சேற்றெழுங் குமிழிக்கும் பேர். (பிங். 3891)

நகைத்தல் என்பது:—

சிரித்தல் நகைத்தலுக்கும்
பாடல் பாடுதலுக்கும் (புறப். 4/20)
நிந்தித்தல் இகழ்தலுக்கும்
ஒளிவிடுத்தல் பிரகாசித்தலுக்கும் பேர். (திவா. 129)

153



புகை என்பது:—

அங்கிக்குறி நெருப்பிருத்தலின் குறிக்கும்
தூமம் புகைக்கும்
புனலாவி நீராவிக்கும்
யோசனை காதவழிக்கும் பெயர் (வேத)

சேகு என்பது:—

அழி அழி என்பதனுக்கும்
கொல் கொல் என்றலுக்கும்
வெல் வெல்லெனலுக்கும் பேர்.

சேகுளம் என்பது:—

பெருகல் பெருக்கெடுத்தலுக்கும்
ஆர்தல் நிறைதலுக்கும் பெயர். 8

9. பகடேரு பரப்பு பாறல் பஃறிபீ டிபமே தெப்பம்
பகடும்பல் வலியே யாகும் பாக்கிடைச் சொற்றுவர்க்காய்
தகடுபுல் லிதழ டர்ப்பு தழையிதழ் ஐம்மை யாகும்
அகடனம் நடுவுள் மேடாம் அகனுளூர் அணிபப் பேணி.

பகடு என்பது:—

எரு உழும் எருக்கும் (புறப்பொ.122ல் 6. புறநா 35)
பரப்பு பரப்பினுக்கும் (புறநா. 3.)
பாறல் பேரெருதிற்கும் (பிங். 2472.)
பஃறி ஓடத்திற்கும் (வேத. 9.)
பீடு பெருமைக்கும் (பிங். 3742.)
இபம் யானைக்கும் (ஷை)
தெப்பம் மிதவைக்கும் (வேத. 9.)
பகடு எருமைக்கடாவிற்கும் (ஐங்கு. 3)
உம்பல் விலங்கேற்றிற்கும் (பிங்.3200)
வலி வலிமைக்கும் பேர் (புறநா. 88-96.)

பாக்கு என்பது:—

இடைச்சொல் எதிர்கால இடைச்சொல்லுக்கும்
துவர்க்காய் பாக்கினுக்கும் பேர்

தகடு என்பது:—

புல்லிதழ் பூப்புறவிதழுக்கும் (திருமுரு. 27)
அடர்ப்பு அடர்ச்சிக்கும்
தழை தழைக்கும்
இதழ் இதழுக்கும் (பொருந. 215)
ஐம்மை அச்சவடிவிற்கும் பேர்.

அகடு என்பது:—

| | |
|---|---|
| ஈனம் | ஈனத்திற்கும் |
| நடு | நடுவிற்கும் |
| உள் | உள்ளுக்கும் |
| மேடு | வயிற்றிற்கும் பேர் |

அகலுள் என்பது:—

| | |
|---|---|
| ஊர் | ஊருக்கும் (பிங். 475) |
| அணி | பெருமைக்கும் (பிங். 2225) |
| பப்பு | பரப்பினுக்கும் (பிங். 2218-3033) |
| ஏணி | நாட்டிற்கும் பேர் (பிங். 457) |

9.

10. சேகுகாழ் தழும்பா சாகும் தேர்க்கால் கால்தடா செய்பாழி
மூகையே மூங்கை நாமம் முகுரம்வல் லரிகண் ணடி
தேகமே யுடலமாகும் தேகியான் மாபுல் லூரி
கோகனம் வனசங் கையாந் தகரையும் நிலக்கடம்பாம்.

சேகு என்பது:—

| | |
|---|---|
| காழ் | வயிரத்திற்கும் |
| தழும்பு | தழும்பிற்கும் |
| ஆசு | குற்றத்திற்கும் பெயர் (அரு. க. 13) |

தேர்க்கால் என்பது:—

கால் தேர் உருளைக்கும் [பேர்.
தடாசெய்யாழி குயவன் பாண்டஞ்செய்யும் சக்கரத்திற்கும்

மூகை என்பது:—

மூங்கை ஊமைக்குப் பெயர் (பிங். 901)

முகுரம் என்பது:—

| | |
|---|---|
| வல்லரி | தளிருக்கும் (திவா. 111) |
| கண்ணடி | ஆடிக்கும் பேர். |

தேகம் என்பது:—

உடல் சரீரத்திற்குப் பேர்.

தேகி என்பது:—

ஆன்மா சேதனனுக்கும். [கும் பெயர்.
புல்லூரி மா முதலியவைகளில் உண்டாகும் புல்லூரிக்

கோகனம் என்பது:—

| | | |
|---|---|---|
| வனசம் | தாமரைக்கும் | பிங். 2918 அரும்பதம் க. 46. |
| கையாந்தகரை | அறுபதத்திற்கும் | |
| நிலக்கடம்பு | நிலக்கடம்பிற்கும் பேர். | |

11. சகுந்தம்புட் பொதுமீன் நீர்வாழ் சகுனமுங் கழுகுமாகும்
சிகண்டிகே தாரம் ஓர்மன் சித்திரம் அலிபண் கூழை
சகுனியே நிமித்தம் பார்ப்போன் சகுனமோர் வேந்தன் பேராம்
சகுனமெண் பிதாபுள் மூலம் சாகினி சேம்பு கீரை.

சகுந்தம் என்பது:—

| | |
|---|---|
| புட்பொது | எல்லாப் பட்சிக்கும் |
| மீன் | மச்சத்திற்கும் (அரு. க. 25) |
| நீர்வாழ்சகுனம் | நீர்ப் பறவைகளுக்கும் |
| கழுகு | கழுகுப் பட்சிக்கும் பெயர். |

சிகண்டி என்பது:—

| | |
|---|---|
| கேதாரம் | மயிலுக்கும் (அரு. க. 7) |
| ஓர்மன் | ஓர் இராஜனுக்கும் |
| சித்திரம் | ஆமணக்கினுக்கும் |
| அலி | பேடிக்கும் (அரு. க. 7) |
| பண் | ஒரு இராகத்துக்கும் |
| கூழை | மயிலின் தோகைக்கும் பேர். |

சகுனி என்பது:—

| | |
|---|---|
| நிமித்தம் பார்ப்போன் | சகுனம் சொல்லுபவனுக்கும் |
| சகுனம் | பட்சிக்கும் |
| ஓர் வேந்தன் | சகுனி எனும் அரசனுக்கும் பேர். |

சகுனம் என்பது:—

| | |
|---|---|
| எண் | சோதிடத்திற்கும் (அரு. க. 25) |
| பிதா | நாரைக்கும் |
| புள் | பட்சிகளுக்கும் |
| மூலம் | கிழங்கிற்கும் பேர் (பிங். 2820 ) |

சாகினி என்பது:—

| | |
|---|---|
| சேம்பு | சேப்புச் செடிக்கும் (பிங். 3490) |
| கீரை | இலைக்கறிக்கும் பேர். |

11

12. தகையருள் கூறுபாடு தாரை பண்பொடு தளர்ச்சி
தகுதியு மிகுதிசுற்று தகைதலை நளியாசன்பே
அகியரா விரும்புராகாம் அகளமே யரம்பைதாழி
அகலறை மலைவோர் வீடு மசலத்தின் பக்கமாமே.

தகை என்பது:—

| | |
|---|---|
| அருள் | கிருபைக்கும் (பிங். 3596) |
| கூறுபாடு | கூறுபாட்டிற்கும் (புறநா. 38) |
| தார் | மாலைக்கும் (திருமுரு. 139) |
| ஐ | அழகினுக்கும் (உரி. 239) |
| பண்பு | குணத்திற்கும் (பிங். 3596) |
| தளர்ச்சி | தளர்விற்கும் ஷை |
| தகுதி | தகுதிக்கும் (புறநா. 6) |
| மிகுதி | அதிகத்துக்கும் (புறப்பொ.108/5) |
| சுற்று | சுற்றுக்கும் (புறநா. 69) |
| தகை | கட்டினுக்கும் (புறநா. 70) |
| தலை | பெருமைக்கும் (உரி. 239 பிங். 2225) |
| நலி | நெருக்கத்திற்கும் (சிங். 253) |
| ஆசு | கவசத்திற்கும் (அரு. க. 10 பிங். 1607) |
| அன்பு | அன்பிற்கும் பேர் (உரி. 239) |

அகி என்பது:—

| | |
|---|---|
| அரவு | பாம்பினுக்கும் (பி. 3034) |
| இரும்பு | இரும்பினுக்கும் |
| இராகு | இராகுக் கோளுக்கும் பேர். |

அகளம் என்பது:—

| | |
|---|---|
| அரம்பை | வாழைக்கும் (அரு. க. 11) |
| தாழி | பதலைக்கும் பேர் ஷை |

அகலறை என்பது:—

| | | |
|---|---|---|
| மலைவோர்வீடு | பாசறைக்கும் | பட்டினப் |
| அசலத்தின் பக்கம் | வாரத்திற்கும் பேர் | பாலை. 237 |

13. சகோரமே சக்ரவாகம் நிலாமுகி செம்போத் தாந்தை
புகாரொரு வூரி ஞேடு கழிமுகம் கபில வண்ணம்
அகாதநீந் திடுபுனற்பேர் அகாத்யம்போல் லாங்குவஞ்சம்
நகாயுதம் சிங்கஞ் சேவல் நாகமும் புலியோடெண்கு.

சகோரம் என்பது:—

| | |
|---|---|
| சக்கிரவாகம் | நேமிப் புள்ளுக்கும் (பிங். 2325) |
| நிலாமுகி | நிலாமுகிப் புள்ளுக்கும் (பிங். 2330) |
| செம்போத்து | செம்போத்திற்கும் (பிங். 2370) |
| ஆந்தை | பேராந்தைக்கும் பேர் (பிங். 2373) |

(தொடரும்.)

# கோலின் செம்மை.

சா. நடராசன்
கூட்டுறவுக் கண்காணிப்பாளர், வேலூர்.

129-ம் பக்கத் தொடர்ச்சி.

தான் காக்கும் மக்களுக்குத் தன்னாலும் தன்னைச் சார்ந்தவர்களாலும், கள்வராலும், பகைவராலும், பிறவுயிர்களாலும் தீங்கு ஏற்படாமல் காக்க அரசனது வேல் பயன்படும். ஆனால் வேல் ஒன்றே மன்னனுக்கு இவ்வாக்கந்தருமோ என மக்கள் ஐயுறக் கூடுமென்றெண்ணியே, நம் செந்நாப் புலவரும், "வேலன்று வென்றி தருவது மன்னவன் கோலதூஉங் கோடா தெனின்" என ஐயப்பாட்டுக்கிடனின்றி, வெற்றிதரவல்லது அரசனது செங்கோல் ஒன்றுமேயாம் என உரைத்தருளினார். அஃதன்றியும் செங்கோலை உடைய அரசனது குடையும் தண்மையுடையதாமென்பதும், அவன் குடைக்கீழ் மக்களனைவரும் இனிது உயிர் வாழ்வரென்பதும் போதர, "வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன், கோனோக்கி வாழுங் குடி" என மக்களின் இயல்பைக் கூறலாயினர். உலகத்துள்ள மக்களனைவரும் தங்கள் உயிர் வாழ்க்கைக்கின்றியமையாத நீரைத் தரவல்ல முகிலைக்காண வானைநோக்குவதுபோன்று, குடிகள் அனைவரும் சுகமாக அரசனது வெண்கொற்றக் குடையின்கீழ் உயிர்வாழ அவனது செங்கோலையே எதிர்நோக்கி நிற்பர். இன்னும் மேகமானது அலர்கதிர் ஞாயிற்றின் வெம்மையைக் குறைத்து மக்களுக்கு நிழல் தருவதன்றியும் குளிர்ந்த நீரையும் தந்து மன்பதையைக் காப்பது போலவே, அரசனது செங்கோலும் பகைவர், கள்வர், வேற்றரசர் முதலியோரால் ஏற்படும் தீங்கைத் தவிர்த்தலோடமையாது மக்கள் எக்குறையுமற்று மகிழ்வுடன் வாழ வெண்குடையையு மளிக்கின்றதன்றோ! இன்னும் இக்குறளை நுணுகி ஆராய்வார்க்குப் பல்வேறு உண்மைகள் புலனாம். அன்பர்கள் அவ்வாராய்ச்சியின்பால் தங்கருத்தைச் செலுத்துவாராக. இது நிற்க, மேற்கூறியவாற்றால் அரசனது கோல் செம்மையுடையதாகவே, குடையும் வேலும் நிரலே தண்மை, கொற்றமாகிய தன்மைகளை எய்துமென்பது பெற்றாம். இதை அறிவுறுத்தற்பொருட்டே இறைமாட்சி கூறவந்த ஆசிரியர் திருவள்ளுவனார் செங்கோன்மை, கொடுங்கோன்மை என இருபது பாக்களால் செங்கோலின் இன்றியமையாமையை எடுத்தோதினார்.

இனி, அரசனுக்குரிய அடையாளங்களுள் கோலே முதன்மை பெற்றது. யாதுபற்றியெனின் கூறுதும். தனி மனிதனிடத்தும் கோல் சிறந்த காக்குங் கருவியாகப் பயன்படுவதைக் காண்கிறோம். இக்காலத்தும் சிற்றூர்களில் வாழும் மக்கள் வழிப்பயணம் செல்லுங்கால் தம்மோடு கோல் ஒன்றை எடுத்துச்செல்வதைப் பார்க்கிறோம். நாய் நரி முதலிய பட்டி விலங்குகளெல்லாவையும் கோலைக்கண்டமாத்திரத்தில் ஓடிச் சென்றுவிடும். "கோலெடுத்தால் குரங்காடும்" என்னும் பழமொழியும் ஈண்டுக் கருதற்பாலது. பாம்பு முதலியவற்றின் தீமையினின்றும் கோலிருந்தால் மனிதன் தன்னைக் காத்துக்கொள்ளக்கூடும். நடந்து செல்லுங்கால் நடையும் விரைவாகச் செல்வதுமன்றி வழிப்பயணத்தின் துன்பமும் அதிகமாய்த் தோன்றுவதில்லை. இடையில் சிற்றோடை, வாய்க்கால்,முதலியவற்றைக் கடக்க நேரின், "ஆழமறிந்து காலைவை" என்பதற்கேற்ப, அவற்றின் ஆழத்தைத் தன் கைக்கோல் கொண்டு அளவிட்டறியலாம். இவையன்றியும் மனித வாழ்க்கையிலும் கோல் பல்வேறு துறைகளில் பயன்படுவதைக் காணலாம். வலிய கோல் ஒன்றால் சிலம்பம் ஆடும் சிறுவரைக் காணும் பேறுபெற்ற யாரும் கோலின் திறத்தைப் பாராட்டாமலிரார். பள்ளிச்சிறார் தம் விளையாட்டுக்களுள் 'கோல்கொண்டு தாவுதல்' (Pole Vault) என்று ஆடுவதைப் பலர் கண்ணுற்றிருக்கலாம். கோல் இன்றி 4 5 அடி உயரந் தாவமுடியாது. சிறுவர் எளிதில் ஒரு வலிய மூங்கிற் கழியின் உதவியால் 8, 9, 10 அடி உயரம் தத்தம் திறமைக்கேற்ப உயரத் தாவுவதைப் பார்க்கலாம். அஃதன்றியும் வயதுசென்ற முதியோருக்கு அஃது ஊன்று கோலாகவும் உதவும். இன்னும் அது மந்திரவாதிகளிடம் "மாத்திரைக் கோ"லாகவும் கள்வர்வசம் "கன்னக்" கோலாகவும் "பயன்" பெறுகிறதன்றோ!

பொருள்களின் நிறையை (எடையை) அறியவும் கோல் தராசாகப் பயன்படுகிறது. எனவே தாக்கவும், காக்கவும் பயனுவதன்றி, அது தூக்கும் கோலாகவும் செயலாற்றுகிறதன்றோ! என்னே உண்மையை உள்ளபடி அறிவிக்கும் கோலின் திறம்! பற்று நீங்கி நடுநிலைமையையே கடைப்பிடித் தொழுகும் சான்றோர் உள்ளத்தைத் தூக்குங் கோலுக்கு ஒப்புமை செய்த நம் செந்நாப்புலவரின் பேறறிவின் திறத்தை என்னென்று கூறுவது! "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க்கணி" எனவமைந்த திருக்குறளின் மாண்பை எவ்வாக்கால்

புகழ்வது! சான்றோரின் உள்ளத்துக்கு மாத்திரமேயன்றி அவருடைய சொல்லுக்கும், "இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே, ஒழுக்க முடையார்வாய்ச் சொல்" என்னும் குறளில் கோலை உவமையாக ஆசிரியர் திருவள்ளுவனார் எடுத்தாண்டு போயினரென்றால், கோலின் பெருமைக்குப் பிறிதொரு சான்றும் வேண்டற்பாலதோ!

இத்துணைப் பெருமைபெற்ற கோலைப்போலவே அரசனும் தளராநிலையும், திட்பமும், நடுவு நிலைமையும் உள்ளவனாக இருத்தல் வேண்டுமென்று கருதியே ஆன்றோர் அதை அரசனுக்குரிய அடையாளங்களுள் மிகச் சிறந்ததாகக் குறித்துப் போந்தனர்போலும். வெறுங்கோலே இத்துணைமாட்சி உடையதாயிருக்க அரசனிடம் உள்ள கோல் செங்கோல் எனச் சிறப்பித்துக் கூறப்படுவதின் பொருள் என்னை? செங்கோல் செம்மையாகிய கோல். செம்மையென்னும் பண்பினடியாகப் பிறந்த சொற்றொடர். எல்லாச் சீரிய குணங்களும் 'செப்மை' என்னும் ஒரு சொல்லில் அடங்கும். எப்பொருளுக்கும் செம்மையாகிய தன்மையை ஏற்றிக் கூறினால் அப்பொருள் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இதை இங்குச் சில சான்றுகளால் எடுத்துக்காட்டி மேற்செல்வாம் அன்பர்கள் பொறுத்தருள்க.

சொல்லில் சிறந்தது 'செஞ்சொல்' பாரதப்போர் நிகழாவண்ணம் கண்ணிலாவரசன் பாண்டவர்பால் தூதனுப்பிய சஞ்சயன் எனும் முனிவன் 'செஞ்சொல் முனிசஞ்சயன்' எனக் கண்ணன் தூதச் சருக்கத்தில் சிறப்பிக்கப்பட்டமை காண்க. மேல் 'சஞ்சயன் தூதுச் சருக்கத்'திலும் இவர் 'உட்காமியாத முனி' எனவும் சொல்லப்பெற்றிருக்கின்றார். பாண்டவர் பதின்மூன்றாண்டு துன்பமுற்று மீண்டும் திரும்பி அரசுரிமையில் பாதி கேட்கத் துரியோதனன் கொடானாய்ப் பாண்டவர்க்கு முறைகேடு விளைவிக்கவும், அதனால் ஒருகால் பாரதப்போர் மூளுமோவென அச்சமுற்ற கண்ணிலாவரசன் அதைக் காக்கவெண்ணி, அறத்தின் மைந்தனும் இளையோரும் புவியாசை நீங்கிக் கானகத்தின் புறத்திருந்து தவஞ்செய்யுமாறு 'பரிவு'ள்ள வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லவேண்டித் தன் நண்பனான சஞ்சய முனிவனை அவர்பால் விடுத்தனன். இவ்வார்த்தைகள் உலகத்தாரெவர் கருத்துக்கும் ஒப்பனவல்லவென்பதைச் சஞ்சயமுனி உணர்ந்திருந்தும், பெருந்தன்மையுள்ள முனியாதலால் அரசனது வேண்டுகோளை மறுக்காமல் பாண்டவரை நண்ணி,

கிட்டற்கரிய மானிடப் பிறவியை அடைந் காலே, கேவலம் அரசுக் காக உடன்பிறந்தாரோடு பொருது தீவினைக்காளாகாமல் ஈறிலா வுலகெய்த மாதவம் புரிதலே கடன்எனத் தக்க நியாயங்களால் பாண்டுபுத்திரனுக்கு எடுத்துரைத்தான். மூவாசையும் துறந்து மும்மையும் தெரிந்த முனிவன் உரை செய்தவற்றை உளங்கொண்ட யுதிட்டிரன் முறுவல்செய்து, மன்னறத்திலிருந்து, பகைவரை இரு விசும்பேற்றிய பிறகே தனக்குத் துறவறத்தில் நினைவு கூடுமென்று முனிவனுக்குச் சொல்லி விடைகொடுத்தனுப்பினர். பாண்டவரின் உள்ளம் இதுவோவெனவறிந்து, 'உட்காமியாத முனி'யாய சஞ்சயன் மீண்டும் அத்தினபுரியடைந்து உள்ளவற்றைத் திருதராட்டினனுக்குக் கூறினன். இவற்றுள் அரசனது வேண்டுகோளால் தருமனிடம் வந்து இவ்வாறு கூறினதேயன்றிச் சஞ்சயனுக்குத் தனக்காகத் துரியோதனனிடம் விருப்பும், பாண்டவரிடம் வெறுப்பும் இல்லையென்பார், உட்காமியாத முனியென்றுரென்பதும், மூவாசையும் அறத்துறந்த சுருதி மாமுனியாதலாலும், அதனுல் பாண்டவருக்குத் துறவறத்தைப்பற்றிக் கூறத்தக்கவராதலாலும், மேதகு சிந்தையால் அவர் கூறியவை (உலகோர் ஒப்பத்தக்கனவல்லவாயினும்) செம்மொழியே யென்பார், "செஞ்சொல் முனி" சஞ்சயன் என்றுரென்பது மட்டுமே ஈண்டுக் கருதற்பாலதாம். இவற்றுல் 'செஞ்சொல்' என்பதின் இலக்கணம் ஒருவாறு விளங்குகிறதன்றே!

பாரத யுத்தத்தில் அர்ச்சுனனைக் கொல்வதெனக் கன்னன் சூளுரை புகன்றிருப்பதால், அது நிறைவேருவண்ணம் அவன் பிறப்பை அவனுக்குள்ளபடி அறிவித்து அவனைப் பாண்டவர்பக்கம் சேரச்செய்யுமாறு கண்ணன் குந்தியைக் கன்னன்பால் செலவிடுத்தான். குந்தியும் கன்னனிடம் சென்று அவன் பிறப்பு முதலியவற்றின் வரலாற்றை அவ்வண்ணமே விவரித்துக் கூறி, பாண்டவர் ஐவரும் தனக்குக் குற்றேவல் செய்யவும் குருகுல அரசர்களுக்கெல்லாம் அசனுகிச் செய்ய கேல்ஒச்சிப் பாண்டவரோடு ஒத்திருத்தலே கடன் என மிக்க விநயமோடு தன் தநயனுக்கெடுத்துரைத்தாள். அதற்குக் கன்னன், "அம்மையே, என்னைத் தாங்கள் பெற்றெடுத்த காலத்து உலகோர் பழிக்கு நாணியோ அன்றி என்மேல் அன்பில்லாமலோ தன்னந்தனியே ஆற்றில் விட்டுவிட்டீர்கள். அற்றை நாள் தொடங்கி,ஆரென்றறியத்தகாத வெனை அங்கதேசத்துக்கு அரசனுமாக்கி, சீரும் திறமும் தனது பெருந்திருவும் எனக்கே அரவக் கொடியோன் தெரிந்தளித்தான். (தொடரும்)

# தாய்மொழியின் இன்றியமையாமை.

திரு. B. சாவளப்பா B. A;

ஆசிரியர், ஹிந்து ஆரம்பப் பாடசாலை, ஆம்பூர்.

அவரவர் தத்தம் குலத்தில் பிறவியிலிருந்து பேசிவரும் பரம்பரையான குடும்ப மொழியே தாய்மொழியாகும். எண்ணங்களும், கருத்துக்களும் யார்க்கும் அவரவர் தாய்மொழியில்தான் திருத்தமாகத் தோன்றும். ஆதலால் தாய்மொழித் தேர்ச்சியே பிறமொழிகளில் தேர்ச்சி பெறுதற்குச் சிறந்த துணையாகும். பேசுதல், பேசியவற்றை உணர்தல், எழுதுதல், எழுதியவற்றைப் படித்துத் தெளிதல் முதலிய செயல்களைத் திறம்பெறத் திருத்தமாக நிகழ்த்துதலே மொழித் தேர்ச்சி எனப்படும்.

முன்னோர்களின் நாகரீகம், சமூக வாழ்க்கை, சமயநெறி முதலியவற்றைப் பிற்காலத்தவர்கள் நன்குணரின் அவர்களின் இகபர வாழ்வுகள் சுகமாகத் திகழும். ஆதலின் அம்முன்னோர் தம் அனுபவ நெறியால் வரைந்துவைத்துள்ள பழைய நூற்களைப் படித்துணர்தல் அவர் வழிவந்தார்க்கு இன்றியமையாததாம். ஒவ்வொரு மொழியும் அதனதன் சிறப்பியல்புகட்கேற்ற சொற்சுவை, பொருட்சுவை, இலக்கிய நயம், முதலியவை தக்க முறையில் அமையப் பெற்று, ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வின்றி விளங்குகின்றது. தாய்மொழியே சிறந்த உள்ளுணர்ச்சியை ஊட்டவல்லது. தாய்மொழியை மறந்தவர்கள் தம்மையே மறந்தவராவார்கள். நாட்டுப் பற்றிற்குத் தாய்மொழியே அடிப்படை. அவ்வந்நாட்டு மக்கள் தத்தம் தனித் தகைமையைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அவரவர் தாய்மொழியே போதிய வேலியாகும் அதுவே யார்க்கும் மெய்ப்பாட்டுணர்ச்சியை விரைவில் விளைவிக்கும். ஒருவன் தான் கருவிற்றிருவாய்ப் பயின்ற தன் சொந்த மொழியில் நிரம்பிய திறமை பெற்றாலன்றிப் பிற மொழிகளின் அருமை பெருமைகளை அறியவும், இலக்கிய நயம் உணர்ந்து மகிழவும், அவற்றிலுள்ள சிறந்த பொருள்களைப் பயன் படுத்திக்கொள்ளவும் இயலாது. பிற மொழிகளில் திறமை பெறுதற்குத் தாய்மொழிதான் ஒரு சிறந்த கருவியாம். ஆதலின் ஆரம்ப வகுப்புக்களில் தாய்மொழிப் போதனை திருந்திய முறைகளில் அமைதல் வேண்டும். இதுபற்றியே அரசாங்கத்தார் பிள்ளைகளுக்கு

162



அங்கிலத்தை மூன்றும் வகுப்பிலிருந்து கற்பிப்பதை விடுத்து நான்காம் வகுப்பிலிருந்து கற்பித்தல்வேண்டுமெனக் கட்டளையிட்டிருக்கின்றனர். சிறுவர் தமது சொந்தமொழியில் திருத்தமாகப் பேசவும், எழுதவும் திறமை பெறுவார்களானால், அவ்வுதவியைக்கொண்டு பிற மொழிகளை எளிதில் கற்பார்கள். சற்கால உலக வாழ்க்கைக்குப் பிற மொழிகளின் அறிவு எவ்வளவுக் கெவ்வளவு இன்றியமையாததாகவிருக்கின்றதோ அவ்வளவிலும் பதின்மடங்கு தாய்மொழியின் அறிவு வேண்டுவதாகும்.

சிறுவர்க்குத் தாய்மொழியை வற்புறுத்திக் கற்பித்தால் அங்கில அறிவு குறைகிறதென்று சிலர் தவறுகக் கருதுகின்றனர். ஆராய்ச்சியாளர் தாய்மொழித் தேர்ச்சியே பிறமொழித் தேர்ச்சிக்கு மூலதனம் என்கின்றனர். வி. கே. பனர்ஜீ அவர்கள் நூறு பிள்ளைகளுக்கு முதலில் தாய்மொழியிலும், பிறகு அங்கிலத்திலும் கற்பித்ததில் தொண்ணூற்றைந்து பிள்ளைகள் இரு மொழியிலும் திறமை பெற்றவராயினர் என இவ்வுண்மையைக் கண்கூடாக விளக்கியுள்ளார். சிறுவர்கள் பிறமொழிகளின் சிறப்பியல் நயங்களைக் குறைந்த காலவளவில் எளிதாக உணர்தற்குத் தாய்மொழி உதவி, யின்றியமையாததாகும். ஒவ்வொரு தாய்மொழியும் சிற்சில வகையில் பிறமொழியோடு ஒத்திருக்கின்றது. துவக்கத்தில் சிறுவர்க்கு அத்தொடர்புகளின் உதவிகொண்டு பிறமொழியில் பேச்சுப் பயிற்சியை வளர்த்து நாளடைவில் அவர்கள் அம்மொழிகளில் வல்லவராகச் செய்யலாம். சிறு பிள்ளைகள் முதலில் தத்தம் தாய்மொழிகளிலுள்ள வேடிக்கைக் கதைகள், சிறுநாடகங்கள் முதலியவற்றை நன்குணர்ந்து, பிறகு அவற்றையே வேறு மொழிகளில் நினைக்கவும், பேசவும், நடிக்கவும், எழுதவும் பழக்கம் பெறுவார்களானால் அவர்கள் அம்மொழிகளில் திறமை பெறுவார்கள். ஆதலின் தாய்மொழி வகுப்பில்தான் பிறமொழித் தேர்ச்சிக்குரிய அடிப்படைகள் கோலப் பெறுதல் வேண்டும். தாய்மொழி இலக்கணத்தைக் கொண்டே பிறமொழி இலக்கண பேதங்களைச் சிறுவர் உணருமாறு செய்தல் ஆசிரியர் கடமையாகும். எட்ஸ் துரையவர்களும் இக்கருத்தினைப் பொருத்தமென்கிறார்.

பிறமொழியில் உரையாடுங்கால் கருதுதல், கருத்துக்களை ஒழுங்குபடுத்துதல், அவற்றிற்கேற்ற பிறமொழிச் சொற்களை அமைத்தல், அவற்றை வெளியிடல் முதலிய வேலைகள் நம்மையறியாமலே தன்னியல்பில் நமக்குள் நிகழ்கின்றன. இவற்றுள் இறுதியிற்கூறிய

ஒன்றுதவிர ஏனையவைகள் தாய்மொழிச் சார்புபெற்றனவாகும். "பீரம்பேணில் பாரந்தாங்கும்" என்றபடி தாய்ப்பால் உண்டு உரம் பெற்றவர்கள் உடல் உறுதிபெற்றுப் பெரும்பாரங்களைத் தாங்கச் சலிக்காது நிற்பதுபோலத் தாய்மொழிகளில் வல்லவர்கள் பிறமொழிகள் எவ்வளவு சிக்கலாக இருப்பினும் அவற்றை எளிதில் கையாளுவார்கள். உதாரணமாக நம்நாட்டில் வங்காளிகள் அங்கிலத்தில் பெரும்புலமை பெற்றவர்கள் எனப் பெறுவதற்கு அவர்களது தாய்மொழித் திறமையே முதற்காரணமாம் என்பதுணர்க.

இளமையே உச்சரிப்புக்களைத் திருத்தமுற அறிதற்குரிய பருவமாம். முதிர்வயதில் மக்கள் எதனையும் பயில்வதென்றால் எளிதன்று. ஆதலின் சிறு பருவத்திலேயே பிள்ளைகட்குத் தாய்மொழி உச்சரிப்பு நன்கு பயிற்றப்படல்வேண்டும். தாய்மொழிகள் தத்தம் உள்நாட்டில் தான் சிறப்புடையன. இப்பேருலகின் எப்பகுதியிலும் பழகுதற்கும் மக்கள் கைத்தொழில்,வாணிபம்முதலிய பிறதுறைகளில் அவ்வத்தேயத்தாருடன் உறவாடிப் போதிய அறிவைப் பெறுவதற்கும் உலகப் பொதுமொழி யொன்று இன்றியமையாததாகின்றது. தற்போது அங்கிலமே அம்மொழியாக உள்ளது. அதுவே நமது துரைத்தன மொழியாகவும் விளங்குகின்றது. ஆகவே இவ்வுலகத்திலுள்ள ஒவ்வொரு தேயத்தாரும், தாய்மொழி, அங்கிலம் என்னும் இருமொழியும் கற்கும் கடமையுள்ளவர்களாகின்றனர் என்பதில் ஐயமில்லை. மாணவர்கள் அங்கிலத்தில் தகுந்த புலமைபெறவேண்டுமெனில் அவரவர் தாய்மொழிகளில் முன்னர் புலமைபெறுதல் வெகு முக்கியமாம். மக்கள் இதனையறியாது அங்கிலம் ஒன்றனையே குறிக்கோளாகக்கொண்டு தாய்மொழியைப் புறக்கணிக்கின்றனர். தாய்மொழியறிவே, பிறமொழிகளை யுணர்தற்குரிய தாயக அறிவென்பதை அவர்கள் மறக்கலாகாது. தாய்மொழிப் புலமை நிரப்புதல் அடிமரத்திற்கு நீரூற்றுவது போலாம். அவ்வாறன்றிப் பிறமொழிகளையே முயன்று கற்று இரண்டிலும் அறிவு நிரப்பப் பெறுமை ஒருவன் கையிலுள்ள அரிய பொருளை வீசி எறிந்துவிட்டுத் தனக்குப் பொருள் வேண்டியபோது வேறு பொருள்களை அரிப்பரித்துத் தேடுதலோடொக்கும். ஆதலின் ஒவ்வொருவரும் தத்தம் தாய்மொழியில் சிறந்த தனித் திறமையும் அதன் உதவிகொண்டு பிறமொழிகளை வேண்டியவரையில் மேன்மேலும் பயன்படுத்திக் கொள்ளுதற்குரிய பொதுத் திறமையும் பெறுதல் நலமாம். இச்சீரிய கருத்தினை உட்கொண்டே உயர்தரக் கலைக்கழகங்களில் அங்கிலங்

தவிர மொழிப் பாடமல்லாத பிற பாடங்களையும் தாய்மொழியிலேயே கற்பித்தல் வேண்டுமென அரசாங்கத்தார் உத்திரவிட்டிருக்கின்றனர். அவ்வாறு செய்வதால் தாய்மொழிப் பயிற்சிக்கு மிகுந்த நேரம் கிடைக்கின்றது. மாணவர் விஷயங்களைக் குறைந்த காலத்தில் எளிதாக உணர்கின்றனர். சிறுவர் தம் தாய்மொழியில் உணரும் விஷயங்களை எப்பொழுதும் தம் சொந்த வாக்கியங்களில் சுலபமாகச் சொல்லவும், எழுதவும் வல்லவராகின்றர். அவ்வாறன்றி அயல் மொழியில் கற்பிக்கப்பெறின் குருட்டுப் பாடம் செய்வதும், சொற்றொடர்களை மறந்து தடுமாற்றங் கொள்வதுமாகிய பல இடையூறுகளை அடைகின்றனர். இத்திருத்தத்தினை நடைமுறையில் கொண்டு வருவதற்குத் தாய்மொழி நவீன முறைகளில் கற்பிக்கப்படல் வேண்டும். பரம்பரைப் போதனுமுறை இனித் தாய்மொழியைக் கற்பிப்பதற்குப் பயன்படாது. தாய்மொழிப் போதகாசிரியர்கள் நவீனமுறைக்கேற்ற தக்க பயிற்சிபெற்றவர்கள் ஆதல் வேண்டும். தாய்மொழி சீரிய நிலையைப் பெறவேண்டுமெனின் அம்மொழி ஆசிரியர்களேயன்றி ஏனைய பாட ஆசிரியர்களும் தமது தாய்மொழியில் வல்லவர்களாகவும், திருத்தமுறப்பேசவும், எழுதவும் ஆற்றல்நிறைந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். பிற பாடகளுக்குரிய மரபுச் சொற்களையும், சொற்றொடர்களையும் அவ்வத் தாய்மொழிகளில் கண்டுபிடிக்கவும், புதிதாக அமைக்கவும், அறிஞர்கள் முற்படின் தாய்மொழி யுணர்ச்சியெங்கும் ததும்பி நிற்கும். அன்றியும் ஆசிரியர்களும், மாணவர்களும் எந்த நேரத்திலும் தம் தாய்மொழியிலேயே திருத்தமுறப் பேசும் வழக்கைக் குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும்.

தாய்மொழிகள் இத்தகைய சீர்திருத்தங்களைப் பெற்றுச் சிறப்புற விளங்குவதற்கு அவ்வம் மொழி ஆசிரியர் தத்தம் அதிகாரிகள் உள்ளத்தில் இந்நல்லுணர்ச்சிகள் தோன்றுவதற்குரிய வழியில் முயன்றுழைத்துத் தங்கள் நிலைமையையும் தாய்மொழியையும் மேன்மைப்படுத்திக்கொள்வார்களாக!

தாய் மொழி தழைக! தாயகம் வாழ்க!

குறிப்பு:- "மொழிப் பயிற்சி முறை" என்னும் தலைப்பில் இக்கட்டுரை முதலாகப் பல கட்டுரைகள் தனிப்புத்தகமுறையில் பின் வெளிவரும்.

# மழலை மணித்திரள்.

ஆம்பூர் கன்கார்டியா போதனமுறைக் கலைக்கழக ஆசிரியை
**திரு. B. பாலாம்பாள் ஜூலியன் அம்மையார் அவர்கள்**
பாலர் களிக்கெனப் பலவிடங்களிலிருந்து திரட்டியது.

மழலை மணி திரள்—இளஞ் சிறுவரின் இனிய சொல்லாகிய மணிகளின் திரள். இப்பகுதி பாலர் மனனம் பண்ணுதற்குரியது.

## 1. எங்கள் நாடு.

எங்கள் நாடு நல்ல நாடு இனிய தமிழில் வல்ல நாடு.
மங்க ளங்கள் பொங்கும் நாடு மாடும் கன்றும் வளரும் நாடு.

ஆறுங் குளமும் அமைந்த நாடு அன்ன வயல்கள் சமைந்த நாடு
பேறுகள் யாவும் பெற்ற நாடு பெருமை அனைத்தும் உற்றநாடு

நீதி நெறிகள் நிறைந்த நாடு நீண்ட செல்வம் பிறந்த நாடு
ஓதி உணர்ந்தோர் ஓங்கும் நாடு உண்மை ஒழுக்கம் தேங்கும்நாடு

கூறும் வீரர்க் கேற்ற நாடு குடிகள் அரசைப் போற்றும்நாடு
ஆரும் ஜார்ஜ்ஜு ஆளும் நாடு அன்னை எலிஸபெத் வாழ்த்தும் நாடு. (எங்கள் நாடு)

## 2. என் தாய்

என்னைக் கனிவாய்ப் பெற்றவர்யார்! இனிமைப்பாலைத் தந்தவர்யார்!
பொன்னே! மணியே!என்றவர்யார்! புண்ணியவதியென் தாயன்றோ!

இரவும் பகலும் சீராட்டி இன்ப மாகக் காத்தவர்யார்!
கரத்தால் என்னை அணைத்தவர்யார்! கண்மணி என்றன் தாயன்றோ!

முகத்தின் மேலே முகம்வைத்து முத்தம்அன்பாய்த்தந்தவர்யார்!
சுகத்தின் வாழ்வே! என்றவர்யார் சுந்தரி என்றன் தாயன்றோ!

கண்ணே! மணியே! கற்கண்டே! கனியே! தேனே! என்றவர்யார்!
உண்ணு அமுதே! என்றவர்யார்! உத்தமி என்றன் தாயன்றோ!

மடிமேல் வைத்தே தாலாட்டி மார்போ டணைத்தே பாலூட்டிக்
குடியின் விளக்கே! என்றவர்யார்! கொஞ்சும் என்றன் தாயன்றோ!

அம்மா! அம்மா! என்பேன்நான் அன்பே! இன்பே! என்பாய்நீ!
அம்மா! என்னும் போதினிலே அமுதாக்கொள்வாய் காதினிலே!

166



## 3. மாதப் பழமொழிகள்.

சித்திரை மாதப்புழுதி பத்தரைமாற்றுத் தங்கம்.
வைகாசி மழை வாழை பெருகும்.
ஆனி அரையாறு ஆவணி முழு ஆறு.
ஆடிப்பட்டம் தேடிவிதை.
ஆவணி இலையசைய காவிரி கரைபுரள.
புரட்டாசியில் பொன்னுருகக்காயும் மண்ணுருகப் பெய்யும்.
ஐப்பசி அடைமழை கார்த்திகை கனமழை.
கார்த்திகைக்குப்பின்மழை இல்லை கர்னனுக்குப்பின் [கொடை இல்லை.
மார்கழிப்பனி மாசூல் பெருகும்.
தைப்பனி தரையைத் துளைக்கும்.
மாசி மழை மாபூக்கும்
பங்குனிமழை பதங்கொடுக்கும்.

## 4. வெண்ணிலா.

விண்மேல் உலாவுகின்ற வெண்ணிலாவே!—உனை
வேண்டுமென்றே யார்படைத்தார் வெண்ணிலாவே!

பால்போல் வெளுத்திருக்கும் வெண்ணிலாவே!—இந்தப்
பாருக்கொரு விளக்காவாய் வெண்ணிலாவே!

வளர்ந்து வளர்ந்து தேய்ந்து வெண்ணிலாவே!—உகை
வாழ்வைத் தெரிவிப்பாய் வெண்ணிலாவே!

பந்துபோல் திரண்டுருண்ட வெண்ணிலாவே!—இன்று
பாலர் விளையாடவாராய்! வெண்ணிலாவே!

## 5. நன்றாகச் செய்.

சிறப்புடனே சிந்தனைசெய் செய்வதைநன் றாகச் செய்
உன்னாலே ஆனவற்றை ஊக்கத்துடன் உவந்துசெய்
என்னருமைக் கண்மணியே! இன்ப முறும் என்றே செய்
உன்கடமை தவறாமல் ஒருமையுடன் இன்றே செய்.

(தொடரும்.)

# பரிணாமவாதம்.

திரு. K. பிரம்மசாரி M. A; L. T;

(133ம் பக்கத் தொடர்ச்சி.)

## டார்வின் சித்தாந்தம்.

பிராணிகள் புதிய பாஹியத்தின் காரணமாகப் புதியமாதிரி வாழ்க்கை வாழ நேரிடுகின்றதென்றும், இதனாலேயே அவைகளின் அவயவங்கள் மாறுபாடு அடைகின்றனவென்றும் மேற்கூறிய லாமார்க்கின் தத்துவம் அக்காலத்தில் பலரால் அங்கீகரிக்கப்பட வில்லை இதற்குக் காரணம் அந்த நூற்றாண்டில் ஜீவித்திருந்த குவியர் என்ற பிரஞ்சு தேசபண்டிதரும், வான்பேர் என்ற ஜெர்மன் தேச ஜந்து சாஸ்திரியும் அக்கொள்கைகளை மும்மரமாக எதிர்த்ததே என்று தெரிகிறது.

லாமார்க் தன் சித்தாந்தத்தை நிலைநாட்டப் போதுமான சாட்சியங்கள் காட்டவில்லை. அவருடைய அத்தாட்சிகள் எல்லாம் உத்தேசமாகவேயிருந்தன. உதாரணமாகக் கடலில் வசிக்கும் கடல் சிங்கமும், திமிங்கலமும், நீந்தப் பழகினபோது, அவைகளின் முன்னங்கால்களும், பின்னங்கால்களும் சிறகுகளாக மாறிவிட்டிருக்கலாமென்று நினைத்தார். சிவிங்கியின் கழுத்து நீண்டிருப்பதற்கு ஒரு விசித்திரமான காரணமும் அவர் கூறினார். அதாவது ஒரு காலத்தில் பூமியின்கண் உண்டான மாறுதல்களினால் மரங்கள் நீண்டு வளர்ந்தனவாம், அப்போது இலைகளும் உயரத்தில் போய்விட்டதனால் அந்தச் சிவிங்கி இலைகளைத் தின்பதற்கு எட்டியெட்டிப் பிடிக்க முயற்சித்ததினாலேயே கழுத்து நீண்டுவிட்டதாம். ஆனால் ஒரு பிராணி தன் கழுத்தை நீட்ட எத்தனிப்பதனாலேயே கழுத்து நீண்டு விடுமாவென்று சிலர் இதைக் கேலிசெய்யலாம். அநேகமாக லாமார்க் எடுத்துக்காட்டிய உதாரணங்கள் இம்மாதிரியாகவேயிருந்தன. இவைகளைப்பற்றிய ஆட்சேபனைகள் நிறைந்து கிடந்தாலும், இவைகள் சரியான காரணங்கள் ஆம் என்று நினைப்பவர்கள் இப்போதும்கூடப் பலர் இருக்கின்றனர். இவர்கள் லாமார்க்கின் சித்தாந்தத்தை நிரூபிக்கக்கண்டுபிடித்த ஆதாரங்களைப் பின்னதிகாரங்களில் எடுத்துக்காட்டுவோம். டார்வின் சித்தாந்தம் சிலகாலம் வரை மங்கிக்கிடந்தது.

இப்போது டார்வின் சித்தாந்தம் என்னவென்று சற்றுச் சுருக்கமாக ஆலோசிப்போம். டார்வின் சித்தாந்தத்தால் சிறந்த கொள்கையாக எடுத்துக்கொள்ளப்படுவது 'இயற்கைத் தேர்ச்சி' என்பதே. இவ்வியற்கைத்தேர்தல் என்னவென்றும் இதற்கு அடிப்படையாயுள்ள அநுபவங்கள் யாவை யென்றும் வரிசைக்கிரமமாகக் கவனிப்போம்.

(1) பிராணிகள் (ஜந்துக்களும், தாவரங்களும்) அநேக முட்டைகளையோ குட்டிகளையோ விதைகளையோ பெறுகின்றன. ஆனால் அவைகள் ஒரே விதமான உணவுப்பொருள் இருப்பிடம், வெளிச்சம், காற்று, உஷ்ணம் முதலியன பெற விரும்புகிறதனால் அவைகளுக்குள் உயிர்வாழ்வதன் நிமித்தம் போராட்டம் ஏற்படுகிறது. இப்போராட்டத்தில் சிலவே ஜயம்பெற்று உயிர்வாழ்கின்றன.

(2) மேற்சொன்ன போராட்டத்தில் சில மிருகங்கள் ஜயம்பெறுவதற்கும், மற்றவை இறப்பதற்கும் காரணம் என்ன? தோல்வியுற்ற மிருகங்களையும், தோல்வியுறாத மிருகங்களையும் ஒத்திட்டுப் பார்ப்போமானால் பின் சொல்லப்பட்டவைகளுக்குத் தேகத்திலே அதாவது தேக அமைப்பிலோ, அல்லது மனத்திலோ ஏதாவதொரு வித்தியாசம் காணப்படும். அவ்வித்தியாசம் கொஞ்சமாயிருந்தாலும் சரி அதுவே அச்செந்துக்களை ஜயம்பெறவோ அன்றித் தோல்வியுறவோ செய்கிறது. மேலும் ஒரு தாயினிடமாகப்பிறக்கும் பிள்ளைகளைப் பார்ப்போமானால் அவர்கள் ஒருவருக்கொருவர் அதிகமாகவோ அல்லது கொஞ்சமாகவோ வித்தியாசப்பட்டிருப்பதோடு பெற்றோர்களிடமிருந்தும் அவ்விதமாகவே வித்தியாசப்பட்டுக் காணப்படுகிறார்கள். மேற்சொன்ன வித்தியாசங்கள் அவ்வச் சந்ததியாருக்குச் செல்லுகின்றன. இவ்வாறு சிறுசிறு வித்தியாசங்கள் ஒன்று சேர்ந்து பலதலைமுறைகள் சென்றபிறகு பெரியதோர் வித்தியாசமாகக் காணப்படும். இப்பெரு வித்தியாசத்தையடைந்த பிராணிதான் முதல்முதல் உற்பவித்த தாய் தந்தைகளைப் பார்க்கிலும் வேறாகவே காணப்படும். அதாவது புதியதோர் பிராணியாகவே தோன்றும். இவ்வாறுதான் புதிய புதிய பிராணிகள் உற்பத்தியாயினவென்று 1859-ம் வருஷத்தில் டார்வின் தாம் எழுதிய "ஜீவர்களின் உற்பத்தி என்னும் புத்தகத்தில் சித்தாந்தப்படுத்தியிருக்கிறார்."

(தொடரும்.)

169

# உள்ளமும் வாழ்க்கையும்.

திரு. N. B. இராமலிங்கம், B. A;
*Accountant copying branch P. M. G. Office, Madras.*

**Mr. James Allen** என்னும் அங்கிலப் புலவர் எழுதிய **Out from the heart** என்னும் கட்டுரையைத் தழுவிய மொழி பெயர்ப்பு

உள்ளம் எப்படியோ அப்படி வாழ்க்கையும். உள்ளத்திலிருப்பவை இடைவிடாமல் வெளியாகின்றன. எதுவும் வெளிப்படாமல் நிற்பதில்லை. சிறிதுகாலம் மறைந்திருந்தபோதிலும் அது முற்றிக் கடைசியாக வெளிப்படும். விதையிலிருந்து மரமாகிப் பின்பு பூத்துப் பழமாவதன்றோ பிரபஞ்சத்தின் இயற்கை? ஒருவன் உள்ளத்தின் நிலைமையே அவனது வாழ்க்கையின் அந்தஸ்துக்குக் காரணம். அவனுடைய நினைவுகள் செயல்களாகின்றன. அவனுடைய செயல்களே அவன் நடவடிக்கையையும் அதிர்ஷ்டத்தையும் குறிக்கும்.

மறைவிலுள்ள ஊற்றிலிருந்து பீரிடும் நீர் சூத்திரத்தைப்போல, உள்ளத்திலிருந்து வாழ்க்கை வெளிப்படுகிறது. விசனமும், சந்தோஷமும், துக்கமும், சுகமும், நம்பிக்கையும், பயமும், விரோதமும் அன்பும், அறியாமையும், ஞானமும், உள்ளத்திலேயே இருக்கின்றன. இவைகள் எல்லாம் மனத்தின் நிலைமைகளே.

உள்ளத்தையுடையவன் மனிதன். மனத்தைக் காப்பவனும் மனிதனே. வாழ்க்கையென்னும் கோட்டைக்குக் காவற்காரனும் மனிதனேயாகும். ஆதலால் அவன் சிரத்தையுடையவனாகவோ அல்லது அஜாக்ரதையுடையவனாகவோ இருக்கலாம். அவனுடைய உள்ளத்தை ஜாக்ரதையாகக் கவனித்து, மனத்தைச் சுத்திப்படுத்திக் கொள்ளலாம். இதுவே ஞானத்திற்கும் பேரானந்தத்திற்கும் உரிய வழி. அல்லது அவன் வாழ்க்கையை நியாயமாகச் செலுத்தாமல் அஜாக்ரதையாக வாழலாம். இது துன்பத்திற்கும் ஆத்ம வஞ்சனைக்கும் உரிய வழி.

மனத்திலிருந்தே வாழ்க்கை வெளிப்படுகின்றதென்பதைமனிதன் உணரவேண்டும். பேரானந்தத்தை அடையும் வழி அவனுக்குத் திறந்திருக்கிறது. மேன்மையான நினைவுகளுடனும், செயல்களுடனும் உறுதியான வழிகளில் நடக்கவேண்டும். அப்பொழுது அவனுக்கு வாழ்க்கை அழகாகவும் திவ்வியமாகவும் இருக்கும். எல்லா ஆபத்துக்களையும், குழப்பங்களையும், துன்பங்களையும் அவன் ஓடச்செய்வான்.

## மனத்தின் இயற்கையும் அதன் சக்தியும்.

மனமே வாழ்க்கையின் நியாயாதிபதி. சுக துக்கங்களை உண்டு பண்ணுவதும் அதன்பலனை அடைவதும் மனமே. பிரேமையை உண்டாக்கும் சக்தியும்சத்தியத்தை அறியும் சக்தியும் மனத்திற்குண்டு.

எல்லா வல்லமைகளும் மனத்திற்கு உண்டு. அனுபவத்தினால் மனிதன் ஞானத்தைப் பெறுகிறான். அந்த அனுபவத்தை அதிகப் படுத்திக்கொள்ளவும் குறைத்துக்கொள்ளவும் கூடும். அவன் இஷ்டப்படி அவன் நடந்துகொள்ளலாம். மிருகத்தனமாகவாவது பரிசுத்தமாகவாவது; மூடனாகவாவது புத்திசாலியாகவாவது; அவன் ஆகக்கூடும். திரும்பத் திரும்பப் பிரயோகிப்பதினால் இதிலொன்றை வழக்கமாகச் செய்துகொள்ளலாம். அல்லது புதுப்பித்த வலிமையினால் அவ்வழக்கத்தை முறித்தெறிந்தும் விடலாம். சத்தியத்தை மறந்து மாயையினால் அவன் சூழ்ந்துகிடக்கலாம். அல்லது மாயைகளை நாசம்செய்து சத்தியத்தை அடையலாம். அவனுடைய அவகாசத்திற்கு அளவில்லை. எப்படிச் செய்வதற்கும் அவனுக்குச் சுதந்திரமுண்டு.

உள்ளத்தின் நினைவுகளின் போக்கே நடத்தையும்,வாழ்க்கையும். இதன் போக்கை நமது இச்சா சக்தியினாலும் முயற்சியினாலும் மாற்றிவிடலாம். புறம்பேயுள்ள வஸ்துக்களினால் ஆசை உண்டாகிறதில்லை. ஆனால் அந்த வஸ்துவின்பேரில் மனத்துக்குள்ள ஆவலே ஆசையாகிறது. துன்பமும், இன்பமும் புறத்தேயுள்ள வஸ்துக்களிலும் வாழ்க்கையிலும் எழுவதில்லை. பரிசுத்தத்தில் பயின்ற மனம் எல்லா ஆசைகளையும் அகற்றி அறிவையும் நிம்மதியையும் அடைகிறது.

புறத்தேயுள்ள வஸ்துக்கள் துன்பத்தை விளைவிக்கின்றன என்று அவைகளை வெறுப்பதினால் பிரயோஜனமில்லை. உள்ளத்தின் பிரதிபிம்பமே புறமாகும். உள்ளம் பரிசுத்தமாயிருப்பின் புறம்பேயுள்ள வஸ்துக்களும் பரிசுத்தத்தை அடையும்.

எல்லா வளர்ச்சியும், வாழ்க்கையும் உள்ளத்திலிருந்து புறம்பே நோக்குகின்றன. எல்லா மாறுதல்களும் உள்ளத்திலே நடக்க வேண்டும். மற்றவர்களின் அதிகாரத்தைச் செலுத்துவதினால் ஒருவன் ஞானத்தையும்,நிம்மதியையும் அடையமாட்டான். தன்னுடைய மனோ சக்தியை அபிவிருத்திசெய்து தன்னுடைய ஆத்மாவை உறுதியான மேன்மையான சன்மார்க்க நெறியில் செலுத்துபவனே

ஞானத்தையும், நிம்மதியையும் அடைவான். வாழ்க்கையை எவ்வாறு திருத்தம் செய்வதென்று இங்குக் கவனிப்போம்.

பழக்கம் செய்தல்.

இடைவிடாமல் திரும்பத் திரும்ப நாம் சிந்திக்கும் நினைவே வழக்கமாக மாறுகிறது. விசனம், சந்தோஷம், போகம், சாந்தம், பேராசை, தயாளம் முதலிய எல்லாமனோ நிலைமைகளும் நினைவினால் புறப்பட்டவைகளே. ஒரே எண்ணத்தை இடைவிடாமல் சிந்தித்துக்கொண்டிருந்தால் அது மனத்தின் பழக்கமாகிப் பின்பு அதினின்று வாழ்க்கை வெளிப்படுகிறது.

முதன் முதலில் நினைப்பதற்கே கஷ்டமாயிருக்கும். எண்ணங்கள் பின்பு அடிக்கடி சிந்திப்பதினால் வழக்கமாகிறது. பழக்கம்செய்வதற்கும் அதைத் திருத்துவதற்கும் மனத்திற்குச் சக்தி உண்டு. தீய வழக்கமாவது செய்யலாம்; நல்ல வழக்கமாவது செய்யலாம்.

"பாவம் செய்வதே சுலபம்; நன்மை செய்வது கஷ்டம்" என்று சாதாரணமாகச் சொல்லுவது வழக்கம். இது அனுபவத்தில் வாஸ்தவமாயினும், சத்தியத்தின் இயற்கைச் சுபாவம் இதுவன்று. நன்மையைவிடத் தீமையை மனிதர்கள் சுலபமாகச் செய்வதற்குக் காரணம் அவர்களின் அறியாமையே. உண்மையான வஸ்துக்களின் சுபாவமும் வாழ்க்கையின் அர்த்தமும் அவர்களுக்குத் தெரியவில்லை. அறிவற்ற தீங்கான எண்ணங்களைப் பழக்கம் செய்தவனுக்கும் பாவம் செய்வது தான் சுலபமாயிருக்கும். அவகாசம் கிடைத்தபொழுது திருடன் திருடியே தீருவான். யோக்கியமான மனிதன் எந்தச் சமயத்திலும் திருடமாட்டான். ஏனென்றால் திருட்டு எண்ணமே அவன் மனத்தில் நுழைந்தது கிடையாது. எல்லாப் பாவமும், புண்ணியமும் இப்படியே நிகழ்கின்றன.

கோபமும், அவசரமும் ஆயிரக்கணக்கான ஜனங்களிடம் சகஜம். ஏனெனில் பொறுமையற்ற கோபமான நினைவுகளை அடிக்கடிச் சிந்திப்பதினால் அது அவர்கள் மனத்தில் வேரூன்றிக்கொள்ளுகின்றது, பொறுமையையும் அமைதியையும் அம்மாதிரியே அடையலாம். முயற்சியினால் அதை அடிக்கடிச் சிந்தித்துக் கெட்ட எண்ணங்களை விலக்கிப் பாவ காரியங்களைத் தடுக்கலாம். நல்ல எண்ணங்களை இயற்கையாகவும் சுலபமாகவும் கொண்டு, கெட்ட எண்ணக்களை அகற்றுபவனே உயர்ந்த சன்மார்க்கத்தையும் பரிசுத்தமான ஞானத்தையும் அடைவான். (தொடரும்.)

172

# மதிப்புரைகள்.

---

## The Hindu Heritage.

**Vol. 1. No. 11 Dated November 1940.**

In reviewing the valuable monthly English Journal **'The Hindu Heritage'** We have great pleasure in saying that it contains worthy articles contributed by eminent writers. The editor **Mr. K. Viswanathan** himself, it seems to us, proves to be a scholar and is full of facts which he exposes in his editorial. The Journal has an exquisite get-up regarding printing. At the same time its subscription is only Rs. 2—0—0 per year. As such we recommend it to the general public for its capacity to improve literary and shastraic culture in the first place and also as a means for improving generally one's knowledge of the Hindu Society. We wish the Journal every success. Those who have a mind to have the Journal may apply to its Publisher **Mr. J. K. Shastri** at 2/10, Brahmanwada Road, Matunga, Bombay 19.

**Editor.**

## குமஸ்தாவின் பெண்.

இந்நூல் "அன்னபூர்ணிகா மந்திர்" எனப் பெயரிய வங்காள நவீனத்தைத் தழுவியதாம். இது மக்களின் குடும்ப வாழ்க்கையை விளக்கிக்காட்டும் கண்ணாடி போல் வறுமையின் சித்திரமாகச் சிறந்து திகழ்கின்றது. சமூக முன்னேற்றம் குடும்ப நலன் முதலியவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்ட இந்நாடக நூல் படிக்கப் படிக்கப் பெருமகிழ்வு தருகிறது. இவ்வினிய நூலை நன்றியறிதலுடன் வரவேற்கின்றோம். இதன் விலை அணா. 6. T. K. S. சகோதரர்கள் மதுரை ஸ்ரீ பாலஷண்முகானந்த சபா என்னும் முகவரிக்கெழுதிப் பெறலாம்.

ஆசிரியன்.